சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 02.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 54/E/2024**

திரு.க.பாலசுப்பிரமணியன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை- 600 001. -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 14.10.2025 நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது:-

a) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட புகார் மனு (வழக்கு எண். CP 4189/E/2023) 14.10.2025 தேதியிட்ட நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

b) மேற்படி புகார் மனு தொடர்பான மனுதாரரால் இவ்வாணைய மின்னஞ்சல் மற்றும் அஞ்சல் வழி மற்றும் 14.10.2025 தேதியிட்ட நேரடி விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்ட (11.01.2025, 12.10.2025) கடிதங்களில் மேற்படி புகார் மனு மீது சட்டப் பிரிவு 19(8)(b)-ன்கீழ் இழப்பீடு பெற்றுத் தரவும், சட்டப் பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவித்திருந்தார்.

c) ஆனால் 14.10.2025 தேதியிட்ட நேரடி விசாரணையில் ஆஜரான மனுதாரர் இவ்வழக்கில் கோரியுள்ள தகவல் தொடர்பாக தன்னால் தாக்கல் செய்யப்பட்ட சட்டப் பிரிவு 19(3)-ன் கீழான மற்றொரு மனுவினை (வழக்கு எண்.54/E/2024) இன்று ஒருசேர விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும், தகவல் பெற்றுத் தரவும், புகார் மனுவினை முற்றாக்கவும் மனுதாரர் ஆணையத்தைக் கோரியதன்

அடிப்படையில், வழக்கு எண்கள் CP 4189/E/2023 & SA 54/E/2024 ஆகிய இரு வழக்குகளும் 14.10.2025 அன்று ஒருசேர விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

d) அதில் **வழக்கு எண். CP 4189/E/2023-ஐ முற்றாக்கம் செய்யவும், வழக்கு எண். SA 54/E/2024-ன்மீது தகவல்களை பெற்றுத் தரவும் மனுதாரர் ஆணையத்தைக் கோரியதை ஆணையம் ஏற்று, ஒரே பொருள் குறித்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண். CP 4189/E/2023 முற்றாக்கம் செய்து உத்தரவிடப்பட்டிருந்தது.**

e) மேலும், இதே பொருள் தொடர்பாக மனுதாரரால் சட்டப் பிரிவு 19(3)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட **வழக்கு எண்.54/E/2024**-ல் மனுதாரார் கோரியிருந்த 2 இனங்களுக்கான தகவல்களை, பொதுத் தகவல் அலுவர், தொடர்புடைய பொது அதிகார அமைப்பிடமிருந்து பெற்று, தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, வழங்க வேண்டிய தகவல்களை, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 06.01.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

2. மேற்படி உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.புனிதவதி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 02.06.2026-ல் நேரில் ஆஜராகி, 26.05.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

3. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழான மனுவில், சென்னை மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சென்னை வருவாய் நிருவாக ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலர் அவர்கள் அனுப்பி வைத்த கடிதம்/ கோப்பு ஒ.மு.வநி.7(1)/30415/2021, நாள் 24.08.2021 கோப்பின் முதல் பக்கம் முதல் கடைசி பக்கம் வரையிலான சான்றிட்ட நகல், மற்றும் மேற்கண்ட கோப்பிற்காக ஒவ்வொரு கடித போக்குவரத்தினையும் பதிவு செய்த அனுப்புகை பதிவேடு, பகிர்மான பதிவேடு, நினைவூட்டு பதிவேடு, மனு நினைவூட்டு பதிவேடு மற்றும் தொடர்புடைய பதிவு பக்கங்களின் சான்றிட்ட ஆவண நகல்களை 2 இனங்களில் வழங்கக் கோரியுள்ளார்.

b) மேற்படி தகவலுக்கு, பொதுத் தகவல் அலுவலரின் கடித ந.க.எண்.ஜே5(இ1)e-373457/2025, நாள் 21.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, மனுதாரர் குறிப்பிடும் 2021 வருடத்திய கோப்பானது பொது அதிகார அமைப்பின் பதிவறையில் கிடைக்கப்பெறவில்லை எனவும்,

இருப்பினும் அலுவலக ஆவணங்கள் பரிசீலனை செய்ததாகவும் அதில் மனுதாரர் குறிப்பிடும் புகார் தொடர்பாக கூடுதல் தலைமை செயலர் வருவாய் நிர்வாகம் அவர்களின் கடிதத்துடன் சென்னை மாவட்ட ஆட்சியருக்கு 28.08.2021 அன்று அனுப்பியுள்ள கடிதத்தின் நகல் மட்டுமே உள்ளதாகவும் (புகார் மனு அலுவலகத்தில் இல்லை எனவும்) மேற்படி விவரங்கள் குறித்து கணினியில் தேடிப்பார்த்ததில் மனுதாரர் குறிப்பிடும் புகார் மனுவானது காவல்துறை ஆணையாளர், நிலஅபகரிப்பு துறை சென்னை பெருநகர காவல் ஆணையரகத்திற்கு ந.க.எண்.இ1-45103-2021, நாள் 07.10.2021 மூலம் அனுப்பட்டுள்ளதாகவும், மேற்படி புகாரின் மனுதாரரான திரு.ராதாகிருஷ்ணன் என்பவருக்கும் நகலிடப்பட்டுள்ளது எனவும், மேற்படி விவரங்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட பொது தகவல் அலுவலரின் கையொப்பமிடாத கடித வரைவின் மூலம் தெரியவருவதாகவும் (அதன் உண்மை நகல் மனுதாரருக்கு சான்றொப்பமிட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும்), மனுதாரர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்களின் 26.09.2023 நாளிட்ட (தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு) மனுவானது பொதுத் தகவல் அலுவலர்/ காவல் ஆணையாளர் நிலஅபகரிப்பு பிரிவு, வெப்பேரி, சென்னை-7 அவர்களுக்கு 17.12.2024 அன்று ந.க.எண்.இ1-1373457-2023 எண்ணிட்ட கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்த விபரம் மனுதாரருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் ஆணையத்தின் 14.10.2025 உத்தரவிற்கு பின்பாக 24.12.2025 (கடித ந.க.எண்.ஜே5(இ1)/e-1373457/2025, நாள் 22.12.2025) மற்றும் 28.04.2026 (கடித ந.க.எண். ஜே5(இ1)/e-1373457/2025, நாள் 29.04.2026) தேதியிட்ட கடிதம் வாயிலாக மேற்படி விவரம் குறித்து பொதுத் தகவல் அலுவலர்/ காவல் ஆணையாளர், நில அபகரிப்பு பிரிவு, வெப்பேரி, சென்னை-7 அவர்களுக்கு நினைவூட்டு கடிதம் அனுப்பட்டுள்ளதாகவும், மேற்படி விபரங்கள் மனுதாரருக்கும் பதிவஞ்சஞ்ல் வாயிலாக தொரிவிக்கப்பட்டுள்ளதும் (மேற்படி கடிதங்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அஞ்சல் துணையின் இணையதள அறிக்கையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

c) எனவே, **பொதுத் தகவல் அலவலர்/ காவல் ஆணையாளர் அலுவலகம், நில அபகரிப்பு பிரிவு, வேப்பேரி, சென்னை-75** அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்களால் (ந.க.எண்.இ1-45103/2021) 07.10.2021 தேதியிட்டு காவல் ஆணையர், நிலஅபகரிப்பு துறை, பெருநகர சென்னை காவல் ஆணையரகம், சென்னைக்கு அனுப்பட்ட கடிதத்தின் மீது (அதன் தொடர்ச்சியாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), சென்னை அவர்களால் மேற்படி பொருள் குறித்து 29.12.2025 மற்றும் 28.04.2026 ஆகிய தேதியிட்டு அனுப்பட்ட நினைவூட்டு கடிதத்தின்படியும்), மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை, தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, வழங்க வேண்டிய தகவல்களை, கட்டணம் ஏதுமின்றி <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை

அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 30.06.2026-க்குள் நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலவலர், காவல் ஆணையாளர் அலுவலகம் (நில அபகரிப்பு பிரிவு), வேப்பேரி, சென்னை-75 அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 54/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலவலர்,
காவல் ஆணையாளர் அலுவலகம்,
நில அபகரிப்பு பிரிவு,
வெப்பேரி, சென்னை-75,

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை- 600 001.

**மேல்முறையீட்டாளர்**

திரு.க.பாலசுப்பிரமணியன்,
9, பங்களாத் தெரு,
சிவந்தாகுளம், தூத்துக்குடி - 628 003.

Copy to: File MP/PA,